பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

04 09 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. ப்ரூனே சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று அந்நாட்டு மன்னரை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.
2. நெடுஞ்சாலை துறையில் கடந்த பத்து ஆண்டுகளில் இரண்டரை மடங்கு கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
3. அமெரிக்கா சென்றுள்ள முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் சிகாகோவில் இன்று பல்வேறு தொழில் நிறுவனங்களின் உயரதிகாரிகளை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.
4. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாட்டுத் திறனை மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டுமென்று மாநில அமைச்சர் திரு மெய்யநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.
5. பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் நேற்று மட்டும் இந்தியாவுக்கு இரண்டு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்கள் கிடைத்துள்ளன.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

ப்ரூனே சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று அந்நாட்டு மன்னர் **Sultan Haji Hassanal Bolkiah** சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இந்த சந்திப்பின்போது பாதுகாப்பு, வர்த்தகம் முதலீடு, எரிசக்தி, விண்வெளி தொழில்நுட்பம், சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்த கூட்டுப் பணிக்குழுவை அமைப்பதற்கான பணிகளும் நடைபெற்று வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

நீண்டகால ஒப்பந்தத்தின் அடிப்படையில் ப்ரூனேயிலிருந்து ஹைட்ரோ கார்பன் இயற்கை வாயு இறக்குமதி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ப்ரூனேயில் தமது பயணத்தை முடித்துக் கொண்டு திரு நரேந்திரமோடி இன்று சிங்கப்பூர் செல்கிறார்.

அந்நாட்டு பிரதமர் திரு லாரன்ஸ் வாங் உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இரு நாடுகளுக்கும் பலனளிக்கக்கூடிய வகையில் இந்த பேச்சுக்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[]<<<>>>[]

நாட்டின் பாதுகாப்பு ஆயத்த நிலையை மேம்படுத்தும் வகையில் ஒரு லட்சத்து 45 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தள்ளது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் கூட்டத்தில் பத்து முக்கிய கொள்முதல் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

விமான தீ தடுப்பு ரேடார்கள், டோர்மியர் 228-ரக விமானம், அடுத்த தலைமுறைக்கான அதிவேக கண்காணிப்பு கப்பல்கள், போர் விமானங்கள் உள்ளிட்டவை இந்த கொள்முதலில் அடங்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 35 முதல் 45 ஆண்டுகளுக்கு செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் பல்வேறு முன் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறைகளில் கடந்த பத்து ஆண்டுகளில் இரண்டரை மடங்கு கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று இந்த துறை மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சகத்தின் முதலீட்டு செலவினம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் அவர் பங்கேற்று பேசினார்.

நடப்பு ஆண்டில் பாரத் நெட் திட்டம், நான்கு-ஜி மொபைல் உள்நாட்டு தொழில்நுட்ப திட்டங்கள் உள்ளிட்ட பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி தொடர்பாக துறை அதிகாரிகளுடன் அவர் விரிவாக ஆலோசனை நடத்தினார்.

கிராமப்புற மற்றும் தொலைதூர பகுதிகளுக்கு குறைந்த செலவில் ப்ராட்-பேண்ட் சேவைகள் வழங்கும் நோக்கில் பாரத் நெட் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக தொலைத் தொடர்புத்துறை அதிகாரிகள் இந்த கூட்டத்தில் எடுத்துரைத்தனர்.

ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் நிறைவடைந்த திட்டங்கள் மற்றும் உரிய நேரத்தில் அவை முடிக்கப்படுவதை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டுமென்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

அமெரிக்கா சென்றுள்ள முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் சிகாகோவில் இன்று பல்வேறு தொழில் நிறுவனங்ளின் உயரதிகாரிகளை சந்திக்கவுள்ளார்.

இந்த சந்திப்பின்போது தமிழ் நாட்டில் தொழில் முதலீடுகள் செய்ய முன்வருமாறு அவர் அழைப்பு விடுக்கிறார்.

முன்னதாக நேற்று சிகாகோ சென்றடைந்த முதலமைச்சருக்கு தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

சிகாகோவிற்கான இந்திய துணை தூதர் திரு சோம்நாத் கோஷ், முதலமைச்சரை வரவேற்றார்.

**[]<<<>>>[]**

விவசாயிகள் அதிக விளைபொருட்களை உற்பத்தி செய்வதற்கு அதிகாரிகள் உதவிட வேண்டுமென்று மாநில அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கோவையில் நேற்று மூன்று மாவட்டங்களுக்கான மண்டல அளவிலான விவசாயிகளின் ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

உணவு தானியத்தை உற்பத்தி செய்யும் விவசாயிகள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை தாண்டி அதிக அளவு உற்பத்தி செய்ய வேண்டுமென்று அவர் அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநில அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வமும் கலந்து கொண்டார்.

**[]<<<>>>[]**

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வு செய்து அதன் செயல்பாட்டு திறனை உறுதி செய்ய வேண்டுமென்று மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு மெய்யநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து நேற்று அவர் ஆய்வு மேற்கொண்டார்.

டேங்கர் லாரிகளில் கழிவுநீரை எடுத்துச் செல்லும்போது உரிய சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்வதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டுமென்று அவர் அறிவுறுத்தினார்.

அமோனியா, குளோரின் போன்ற ரசாயனங்களை பயன்படுத்தும் தொழிற்சாலைகளை கண்காணிப்பதுடன், அதற்கான வழிமுறைகள் முறையாக பின்பற்றப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டுமென்றும் திரு மெய்யநாதன் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

தமிழக சுகாதாரத்துறையில் காலியாக உள்ள பணியிடங்கள் தொடர்ந்து நிரப்பப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

தஞ்சை, மயிலாடுதுறை உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த சுகாதாரத்துறை அலுவலர்கள், அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு மருத்துவக் கல்லூரிகளின் முதல்வர்கள் நியமனம் தொடர்பான பட்டியல் தயாராக உள்ளதாக கூறினார்.

*( சவுண்ட்பைட் - மா சு ) ---40- செகண்ட்*

முன்னதாக கும்பகோணம் மற்றும் அம்மாபேட்டை மருத்துவமனைகளில் ஐந்து கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கட்டிடங்களை திரு மா சுப்ரமணியன் திறந்து வைத்தார்.

[]<<<>>>[]

மதுரையில் உள்ள உலக தமிழ் சங்கம் எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் சங்க விதிகளின்படி புதுப்பிக்கப்பட்டுள்ளது.

சங்க விதிகளின்படி பொதுக்குழு கூட்டம் நடத்தப்படாத காரணத்தால் புதுப்பிக்கப்படாமல் இருந்த தமிழ் சங்கத்தை மாநில அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் முயற்சி மேற்கொண்டு இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

உக்ரைனின் **Poltava** நேகரில் ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 51 பேர் உயிரிழந்தனர். 200-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

[]<<<>>>[]

இலங்கையில் விவசாயிகள் பெற்ற அனைத்து பயிர்க்கடன்களும் உடனடியாக ரத்து செய்யப்படுவதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஸ்வீடன் நாட்டில் இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், தொலைக்காட்சி பார்ப்பதற்கு தடை விதித்து அந்நாட்டு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

[]<<<>>>[]

இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையே கணக்கு தணிக்கை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

மேற்குவங்க குற்றவியல் சட்டத்திருத்த மசோதாவான அபராஜிதா மகளிர் மற்றும் குழந்தைகள் சட்ட மசோதா அம்மாநில சட்டப்பேரவையில் நேற்று குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.

**[]<<<>>>[]**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, மேல்மலையனூர் பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை அமைச்சர் திரு செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

கோவை அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் உலக சாதனை நிகழ்வாக இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட நாட்டு நலப்பணித் திட்ட மாணவிகள் **EDUCATION FOR ALL** என்ற உருவ வடிவமைப்பில் நின்று கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்.

**[]<<<>>>[]**

பெரம்பலூர் மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தியையொட்டி விமர்சனத்திற்குரிய புகைப்படங்கள், விளம்பர தட்டிகள் வைப்பதை தவிர்க்க வேண்டுமென்று மாவட்ட காவல்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

**[]<<<>>>[]**

தருமபுரியில் தொழிலாளர் நலத்துறை சார்பில் பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனை கடைகளை ஆய்வு செய்யும் அலுவலர்களுக்கான பயிற்சி நேற்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

தேனி மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி பாதுகாப்பு தொடர்பான முன்னேற்பாட்டு பணிகள் குறித்து ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

**[]<<<>>>[]**

சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான செயல்பாட்டை கர்நாடக துணை முதலமைச்சர் திரு டி கே சிவக்குமார் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டு, ஆய்வு செய்தனர்.

**[]<<<>>>[]**

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் நேற்று மட்டும் இந்தியாவுக்கு இரண்டு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்கள் என ஐந்து பதக்கங்கள் கிடைத்துள்ளன.

ஆடவர் உயரம் தாண்டுதலில் சரத்குமார் வெள்ளிப்பதக்கமும், மாரியப்பன் தங்கவேலு வெண்கலப்பதக்கமும் வென்றனர்.

மாரியப்பன் தங்கவேலு ஒலிம்பிக் போட்டிகளில் தொடர்ந்து மூன்றாவது முறையாக பதக்கம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆடவர் ஈட்டி எறிதலில் அஜித்சிங் வெள்ளிப்பதக்கமும், சுந்தர் குர்ஜால் வெண்கலப்பதக்கமும் வென்றனர்.

மகளிர் 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இந்தியாவின் தீப்தி ஜீவன்ஜி வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை மூன்று தங்கம், எட்டு வெள்ளி, ஒன்பது வெண்கலம் என மொத்தம் 20 பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 19-வது இடத்தில் உள்ளது.

பாரதாலிம்பிக்கில் பதக்கங்கள் வென்ற வீரர்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திரமோடி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

அவர்களுடைய சாதனை அளப்பரியது என்றும், இது இந்தியாவுக்கு பெருமை அளிப்பதாகவும் பிரதமர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

***End of News***